# ஜூலை 2016 மாதத்திற்கான பூச்சிநோய் கண்காணிப்பு

## நெற்பயிர்

நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் தர்மபுரி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவள்ளுர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்.

பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீத கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

மேலும் நாற்றங்கால் மற்றும் நடுவு செய்த வயல்களில் இலைப்பேனை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீத கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கீழ்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும்.

- பியுப்ரோபெசின் 25 SC 200 மில்லி அல்லது
- தையோமீதாக்சம் 200 WDG 100 மில்லி அல்லது
- டைமீத்தோட் 400 மில்லி

**நாற்றாங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள்.**

இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, நெல் கூட்டுப்புழு மற்றும் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நோயினைப் பொறுத்தவரை இலைப்புள்ளி நோய் மற்றும் குலைநோய் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றினைக் கட்டுப்படுத்த

அ) ஈர விதை நேர்த்தி

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும்.

2. நெல் நாற்றங்காலைப் பிடுங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு 20 சென்ட் நாற்றாங்காலுக்கு 1.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் மற்றும் 30 கிலோ தொழு உரம் இடவும்.

**3. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்**

நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ உயரத்தில் தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும்.

இந்தத் தேங்கிய நீரில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

**நெற்பயிரில் பூச்சி மேலாண்மை**

1. நாற்றங்காலில் அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு 12.5 கிலோ 20 சென்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தயாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி) பயிர்களில் தெளிக்கவும்.
4. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் பாஸ்பாமிடான் 40 SL 5 மி / 8 சென்ட் நாற்றங்களுக்கு தெளிக்கவும்.

**நிலக்கடலை**

விருத்தாசலம் மாவட்ட விவசாயிகள் நிலக்கடலைப் பயிரில் சிகப்பு கம்பிளி அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறிகளை வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் டைகுளோவாஸ் 70 டபுல்யு.எஸ்.சி 250 மில்லி ஒரு ஏக்கருக்கு அல்லது பாசலோன் 35 EC 300 மில்லி ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும்.

சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட விவசாயிகள் டிக்கா இலைப் புள்ளி நோயைக் கட்டுப்படுத்த கார்பன்டாசிம் 0.1 சதம் தெளிக்கவும்.

**முட்டைகோஸ்**

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் முட்டைகோஸ் பயிரில் புரோடினியா அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி / இனக்கவர்ச்சிபொறி வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் புளுபென்டிஅமைட் 20 WDG 2.5 g / 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**மக்காச்சோளம்**

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த மெட்டலாக்சில் மற்றும் மேன்கோசெப் மருந்து 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**தகவல்**

இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3.